# வர்க்கப் போர் என்றால் என்ன?

[illegible] | ஜனவரி '88 | 80 கா[illegible]

83 கட்டு[illegible]

FREE E - BOOKS , www.thamizham.net.,



## பென்சிலின் பற்றிய உண்மைகள்

பென்சிலின் கண்டுபிடிக்கப்பட்டது ஒரு விபத்தாகும் பல்வகை சீழ் ஏற்படக்காரணமாக பாக்டீரியாக்களை சோதனைச் சாலையில் வளர்த்து வந்த அலெக்சாண்டர் பிளம்பிங் இந்த நீலப்பச்சை, பூஞ்சகாளான் தோன்றி பாக்டீரியாக்களை அழித்துள்ளதைக் கண்டறிந்தார். ''சிறிய பிரஷ்'' போன்ற தோற்றத்தில் உள்ளதால் அப்பொருள்படும் ''பென்சிலின்'' என்ற பெயரை இதற்கு வைத்தார்.

பென்சிலின் மருத்துவ வரலாற்றில் ஒரு மைல் கல்; கிராம் பாசிட்டிவ் வகை பாக்டீரியாக்கள் அனைத்தையும் நிர்மூலமாக்கும் சக்தி பென்சிலீனுக்கு உண்டு அதாவது மனித உயிர்களை இதுவரை அச்சுறுத்தி வந்த டிப்தீரியா, விஷக்காய்ச்சல்கள், தொண்டை நோய்கள், அடிபட்டதால் ஏற்படும் ரணங்கள் சிபிலிஸ், கொனோரியா என்ற கொடிய பாலியல் நோய் போன்ற எண்ணற்ற நோய்களைப் பென்சிலின் புறம் கண்டது.

ஆண்டி பையாடிங் எனப்படும் எதிர் உயிரிகளிலேயே நச்சுத்தன்மை குறைந்ததும் பாதுகாப்பானதும் பென்சிலின்தான். ஆனால் மருத்துவரிடம் ஆலோசனை பெறாமல் பென்சிலின் பயன்படுத்துவது ஆபத்தானது.

—சித்தன்

## மறைவுக்கு வருந்துகிறோம்

- தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன்
- எழுத்தாளர் நா. பார்த்தசாரதி
- தோழர் பி. ராமமூர்த்தி
- எழுத்தாளர் சுப்ரமண்ய ராஜு

ஆகியோர் மறைவுக்கு சுட்டி தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# புதிய நாள்காட்டி அமைப்போம்

"கிரேகோரியன் காலண்டர்" என்று அழைக்கப்படும் இப்போதைய நாள்காட்டியில் பல ஒழுங்கீனங்கள் நிலவுகின்றன. ஒவ்வொரு மாத அளவிலும் கிழமைகள் மாறி வருவதற்கு பகுத்தறிவுப் பூர்வமான விளக்கம் இல்லை.

எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கும் நாம் இதனையும் சீராக்கினால் என்ன? இதோ வழி : மாதத்திற்கு 28 நாட்கள் வீதம் 13 மாதங்கள் இருக்கட்டும். ஒவ்வொரு மாதத்திலும் சரியாக 4-வாரங்கள் அமையும் எல்லா மாதங்களின் எல்லா தேதியும் மாதா மாதம் அப்படியே மாறாமல் இருக்கும். காலண்டர் கிழிக்கும் வேலையும், ஆண்டு தோறும் மாற்றும் வேலையும் இனி இருக்காது. விரல்களை மடக்கி முட்டியைப் பார்த்து ஜுலை மாதத்திற்கு எத்தனை நாள் என்று இனி எண்ண வேண்டிஇராது.

இதில் அடங்காமல் எஞ்சி (28 × 13 = 364) நிற்கும் 365-வது நாள் ஆண்டின் கடைசி நாளாக, ஆண்டு நாள் என்று அழைக்கப்படும். இதற்கு. தேதி, கிழமை, மாதம் கிடையாது. "லீப்" ஆண்டு வரும் போது 6-வது மாதத்திற்கும் 7-வது மாதத்திற்கும் இடையே தேதி, கிழமை, மாதமற்ற ஒரு "லீப் நாளை" அமைத்தால் பிரச்சனையில்லை.

இது போன்றதோர் கருத்தை மோசஸ் புரூயினஸ் காட்ஸ் வந்த் என்பார் உலகஅரங்கில் வெகு நாட்களுக்கு முன்பே வைத்துள்ளார். இதில் சில பாதிப்புகள் இருந்தாலும் ஏராளமான நன்மைகள் உண்டு.

21-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தேனும் இப்புதிய நாள் காட்டியை வழக்கில் கொண்டுவர வழி செய்ய வேண்டும்.

— உலகப்பன்

| ஞா. | தி. | செ. | பு. | வி. | வெ. | ச |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |

FREE E - BOOKS , www.thamizham.net.,

## !? பதில்கள்

? எழுத்தாளர்கள் பற்றி . . .

! இந்திரா பார்த்த சாரதி: எழுத்தாளர்கள் தங்களை தனிப்பட்ட வர்க்கம் என்று நினைக்கிறார்கள். தனக்குச் சமூகப் பொறுப்பில்லை என்பவர்கள் சமூக விரோதிகள். எழுத்தாளனின் உணர்ச்சி கோபமாகத்தான் இருக்க வேண்டும். வாசகர்களுக்குள்ளும் கோபத்தை உண்டாக்க வேண்டும்.

? தமிழ் சினிமா எப்படி இருக்கிறது......

! அசோக மித்திரன்: சினிமா பார்ப்பது ஃபுட்பால் மாட்ச் பார்ப்பது போலிருக்கிறது. படத்தின் வசனங்களை பாத்திரங்கள் படம் பார்ப்பவர்களின் முன் ஒப்பிக்கிறார்கள். கதாநாயகி மலையருகிலும், கடற்கரை கணவாய் போன்ற இடங்களில் போஸ் தருவது, கதாநாயக நாயகி மலர்ப் போர்வைக்குள் படுத்திருப்பது—அதாவது திரைப்படங்கள் கனவுகளைத்தான் விநியோகிக்கின்றன.

? உங்கள் அகராதியில் புரட்சி, சுதந்திரம் உழைப்பு—இவற்றிற்கு அர்த்தம் என்ன?

! பகத்சிங்: புரட்சி—மனித குலத்திற்கு சொந்தமான உரிமை.

சுதந்திரம்—அழியாத பிறப்புரிமை.

உழைப்பு—இதுவே சமுதாயத்தை வாழ வைக்கிறது.

---


# வேல் டைப்பௌண்டரி

● புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
○ எல்லா மொழி அச்செழுத்துக்கள்
❊ எல்லாவித அச்சக உபகரணங்கள்
★ போஸ்டர் எழுத்துக்கள்

38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை,
சென்னை-7 தொ.பேசி. 27 087


FREE E - BOOKS , www.thamizham.net.,

சிறுகதை

# பசி



நான்கு நாட்களாக நல்ல மழை. பண புழக்கமே இல்லே. அரைப் பட்டினி, கால் பட்டினி அதில், கணவனால் கைவிடப்பட்ட முனியாவும் ஒருத்தி. இரு ஆண் குழந்தைகள் அடுத்தது ஆணா? பெண்ணா? என்ற வினாவில் கேள்விக் குறியை மாற்றி வரைந்த கோலத்தில் இருந்தாள்.

"அம்மா : பசி..... அம்மா : பசி மாத்திரை சாப்பிட்டது, ஒரே எரிச்சலாக இருக்கு கஞ்சியாவது கொடு" என்ற குழந்தைக்கு கண்ணீர் தான் வடித்தாள். அவள் என்ன செய்வாள். அடுப்பு வைக்க இடமும் இல்லை. இருக்கும் அட்டைகளும் நனைந்து கூழ்போல உள்ளன.

'குழந்தைகளே! குழந்தைகளே! கஞ்சிக்காக கலங்க வேண்டாம். பசிக்காக பறக்க வேண்டாம். அரிசி நனைந்ததால் அதில் உள்ள அரிசிகள் ஊறியுள்ளன. உங்கள் கும்பிகளோ உலை போல கொதிக்கின்றன. அரிசியை ஆளுக்கு ஒரு வாய் உண்ணுங்கள். அதுவே குழைந்து விடும்' என சொல்லாமல் ஆளுக்கு ஒரு கை அரிசியைக் கொடுத்தாள்.

அவளுக்கு ஓர் ஆசை. குழந்தைகளுக்கு ரொட்டி பால் வாங்கிக் கொடுக்க. ஆனால் கையில் காசு இல்லே. இந்த நிமிஷம் வரை கைவிட்ட கணவனை நினைத்து வருந்தியவள் மறு நிமிடமே மாற்றிக் கொண்டாள். நிறை மாத நிலையை உண்டாக்கியவன் அல்லவா?

மீண்டும் அரசு மருத்துவமனை அவசர பிரிவிற்கு சென்றாள். இடுப்பு வலி என பொய் சொன்னாள். பிரசவ விடுதியில் அனுமதிக்கப்பட்டாள். நான்கு நாட்களாக மருத்துவ மனையில் கொடுத்த ரொட்டியையும், பாலையும் பிள்ளைகள் சலிக்கும் வரையில் கொடுத்தாள். பிரசவிக்கவில்லையென்பதால் புறநோயாளியாக மாற்றப்பட்டாள்.

காலைக் கதிரவன் பிரகாசித்தான். மழைக்கான அறிகுறி மங்கியது. மீண்டும் கூடை தூக்க தொழிலுக்கு வந்துவிட்டாள்.

— மு. கிருஷ்ணசுவாமி

FREE E - BOOKS , www.thamizham.net.,

## கடிதக்குண்டு



உட்கல் பல்கலைக் கழக பதிவாளர் திரு. சாமந்தரே வீட்டில் இல்லாத போது ஒரு பார்சல் வந்திருந்தது. வாசலில் கிடந்த அதை அவர் கண்டவுடன் பயந்து போனார். காரணம் அது ஒரு கடிதக் குண்டாக இருக்கலாம் என்ற சந்தேகத்தை அதன் தோற்றம் ஏற்படுத்தியது. உடனே அருகில் உள்ள காவல்நிலையத்திற்குச் சென்று புகார் தந்தார். காவல்படையே பாதுகாப்பாக வந்தது. மிக எச்சரிக்கையாக பார்சல் பிரிக்கப்பட்டது. உள்ளே 100, நூறு ரூபாய் நோட்டுகள் காணப் பட்டன. அதனுடன் ஆர். சி. மகாபத்ரா என்று பெயர் குறிபிட்ட தாளும் விழுந்தது. பல்கலைக்கழக எழுத்தர் வேலைக்கு நடந்த போட்டித் தேர்வில் இந்தப் பெயருடையோர் கலந்து கொண்டதாகத் தெரிய வந்தது.

நல்ல வேளை குண்டு இல்லாமல் பதிவாளர் தப்பித்தார். ஆனால் இவ்வளவு சின்ன வேலைக்கு இவ்வளவு தொகை தாராளமான லஞ்சமாகத் தரப்பட்டிருக்கிறதே என்று பதிவாளர் அதிர்ந்தார்.

## வேலை கிடைக்குமா?



ஜெகதீஷ் சர்மா மோட்ச பீடாவைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரி. வேலை வாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்து 14 ஆண்டுகளுக்குப்பின், அந்நிறுவனத்திடமிருந்து கடிதம் வந்தது. தாமதமானாலும் எப்படி யேனும் தனக்கு இந் நிறுவனம் வேலை கொடுத்து விட்டதே என்ற மகிழ்ச்சியுடன் கடிதத்தைப் பிரித்தார். மகிழ்ச்சி ஒரே விநாடியில் திகைப்பும் துன்பமுமாக மாறியது. பின்தங்கியோர் நலத்துறையில் காவல்காரர் வேலை என்று குறிப்பிட்டு இக்கடிதம் அவர் தந்தைக்கு வந்திருந்தது. அவர் தந்தை இறந்து போய் 10 ஆண்டுகள் ஆகிவிட்டன. இவருக்கும் வேலை என்றாவது ஒரு நாள் கிடைக்காமலா போய் விடும்?

FREE E - BOOKS , www.thamizham.net.,



## மரணத்தை நிச்சயிப்பது சிகரெட்டுகள்

| | காரணம் | மரண வாய்ப்பு ஓராண்டில் |
|---|---|---|
| 1. | தினம் 20 சிகரெட்டுகள் புகைத்தல் | 200-இல்—1 |
| 2. | ஆழ்கடலில் மீன் பிடிக்கையில் விபத்து | 400-இல்—1 |
| 3. | சாலை விபத்துக்கள் | 5000-இல்—1 |
| 4, | இல்லங்களில் நிகழும் விபத்துக்கள் | 10,000-இல்—1 |
| 5. | பணிகளில் நேரும் விபத்துக்கள் | 20,000-இல்—1 |
| 6. | விமான விபத்துக்கள் | 1,00,000-இல்—1 |
| 7. | அணு உலைகளில் பணியாற்றுவதால் கதிர் வீச்சு | 1,00,000-இல்—1 |
| 8. | அணு உலைகளில் ஏற்படும் விபத்துக்கள் (100 நிலையங்களில்) | 500-கோடியில்—1 |

* புள்ளி விவரங்கள் : சுகாதாரக்கழகம்

— பம்பாய் புதியவன்


**மாதம் 2,000 வரை சுயமாக சம்பாதியுங்கள்**

எங்கள் பைனான்சிங் கம்பெனிக்கு பிக்ஸட் டெபாஸிட் (FIXED DEPOSIT) சேர்த்துக் கொடுத்து மாத சம்பளத்தோடு மிகக்கவர்ச்சிகரமான கமிஷன் பெறலாம். சென்னையில் உள்ளவர்க்கு மட்டுமே இவ்வாய்ப்பு. முன் அனுபவம் உள்ளவர்களாயின் நன்று.

**மலர்ச்சி நிதி — AP 638, அண்ணா நகர், சென்னை-600 040** — Advt


FREE E - BOOKS , www.thamizham.net.,

## ? இன்றையத் தேவை என்ன ?

நம் தாழ்வுகளை நாம் உணரும் வகையில் நமக்குள் பரவலான சர்ச்சைகளும் விவாதங்களும் உருவாக வேண்டியது இன்றையத் தேவை. வாசகர்களையும் பார்வையாளர்களையும் இணைத்து இந்த விவாதங்கள் உருவாகி வரவேண்டும். குழுமனோபாவங்களுக்கும், தனி நபர்களின் அகங்காரங்களுக்கும், குரோதங்களுக்கும் போட்டா போட்டிகளுக்கும் சிறிதும் மதிப்பு அளிக்காமல், சமூக ஆரோக்கியத்தை முன்னிறுத்தி, கலைஞர்களும், அறிஞர்களும் வாசகர்களும், பார்வையாளர்களும் இணைத்து இந்த விவாதங்களை உருவாக்கவேண்டும்.

இந்த மண்ணில் உன்னதங்கள் எதுவும் முளைக்காது' என்று ஒரு விமர்சனப் பார்வை உண்டு. சகல உன்னதங்களையும் இந்த மண்ணில் முளைக்க வைக்க முடியும் என்ற நம்பிக்கைக் கொண்டவன் நான். காலங் காலமாக தாழ்வுற்றுக் கிடந்த சமூகங்கள் மிகக் குறுகிய காலப்பொழுதில் அறிவின் கூர்மைக [illegible] வீச்சுக்களோடும் எழுந்து வந்திருக்கின்றன. இதுபோன்ற கலை எழுச்சிகளையும், அறிவுப் புரட்சிகளையும், சாத்திரங்கள் பதிவு செய்திருக்கின்றன. அங்கு பள்ளங்கள் நிரம்பி அதன்மேல் கோபுரங்கள் எழும்பியிருக்கின்றன.

உலகின் எதாவது ஒரு மூலையில் ஒரு உன்னதம் சாத்தியம் என்றால் அதே உன்னதத்தை இங்கும் எழுப்பிக் காட்டமுடியும். நமக்குக் கனவுகள் வேண்டும். அந்தக் கனவுகளை மண்ணில் இறக்க அசுர உழைப்பும் வேண்டும்.

— சுந்தர ராமசாமி

## சுட்டி

தொடர்பு முகவரி :
AP 638, H பிளாக், அண்ணா நகர்,
சென்னை — 600 040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# கவிதைகள்

" இந்தியா
சுதந்திர நாடு ..."
அடடா ...
வதந்திகளைப் பரப்புவதில்
இந்தியர்கள் வல்லவர்கள்.

— இரா. எட்வின்

மோதிரக் கையால்
குட்டுப் பட்டதாக
பெருமைப் படுகிறீரே...!
நாளை
தங்க வாளால்
தலையை வெட்டுவார்கள்....
சம்மதமா ?

— சூரிய உதயன்

---

❋ பிராய்லர் கோழிகள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் கிடைக்கும்
❋ ஓட்டல்களில் சப்ளை செய்ய
ஏஜெண்டுகள் தேவை

**ஜோதி கோழிப் பண்ணை**

13, தணிகாசலம் தெரு, பெரம்பூர்,
சென்னை - 600 011.

---

**'சுட்டி' வருட சந்தா ரூ. 10-00**
**ஆயுள் சந்தா ரூ. 150-00**

FREE E - BOOKS , www.thamizham.net.,

## மேடைப் பிழிவு

● ? திரைப்படப் பாடல்கள் இலக்கியமாகுமா?

! எல்லாப் பாடல்களுமே இலக்கியமாகாது!

● ? திரைப்படப் பாடல்கள் தரம் குறைந்திருப்பதற்கு என்ன காரணம்?

! பாரதியைப் போல எழுத நினைத்து கவிஞர்கள் இன்று தோல்வியைத் தழுவுகின்றனர். தமிழ் சினிமா கீழ்தரமான ரசனைக்கு வந்து விட்டது. ஆழமான கதை, அழுத்தமான சம்பவங்கள் தமிழ் சினிமாவில் இல்லை. எனவே தான் பாடல்களில் ஒரு போலித்தனம் செயற்கைத் தன்மை தென்படுகிறது.

● ? பத்திரிகைகளில் கவிதையின் நிலைமை எப்படியிருக்கிறது?

! இடநிரப்பிகளாக கவிதைகளை பத்திரிகைகள் பயன் படுத்திக் கொள்கின்றன. அதற்கு காரணமும் நாம்தான். பத்திரிகைக்கு தகுந்தவாறு கவிதைகளை எழுதுகிறவர்களே இன்று அதிகமாகிப் போய் விட்டார்கள்.

● ? நாம் எழுதுவது யாருக்கு போய்ச் சேர வேண்டுமா அவர்களுக்கு போய் சேருகிறதா?

! அவ்வளவாக போய் சேருவதில்லை. இலக்கியம் என்பதே படித்தவர்களுக்கு மட்டும் தான் என்ற நிலையாக மாறிவிடுமோ என்று கூட நினைக்கிறேன். ஏர் கண்டிஷன் அறையில் அமர்ந்து கொண்டு சோஷலிஸம் பேசுவதில் என்ன பயன் கிடைக்கப் போகிறது?

கிராமங்களுக்கு நமது இலக்கியம் போக வேண்டும். மாதம் ஒரு கிராமம் என எடுத்துக் கொண்டு நமது இலக்கியவாதிகள் அங்கு சென்று இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்தி அவர்களுக்கு இலக்கிய ரசனையை ஏற்படுத்த வேண்டும். அதற்கு இங்குள்ள இலக்கிய அமைப்புகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு நல்ல முடிவு காண வேண்டும்.

—(உரத்த சிந்தனை வாசகர் சந்திப்பில் கவிஞர். நா. காமராசன் பேசியதிலிருந்து.)

தொகுப்பு : எஸ். வி. ராஜசேகர்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஆபாசத்திற்கு அழைப் பிதழ்



நம் நாட்டில் பெண்களை உயர்வாகப் போற்றுகிறோம், மதிக்கிறோம். நமக்கு நாடும் பெண்; மொழியும் பெண், ஆனால் இவை எல்லாம் பேச்சளவில் மட்டும்தானா? நிஜ வாழ்வில்பெண்கள் தாழ்ந்தவர்களாக, கவர்ச்சிப் பொருளாக மலிந்து வருவதற்குக் கீழ்க்கண்ட பத்திரிகை விளம்பரம் அத்தாட்சி:

''பெண்களே நீங்கள் எத்தகையவர்கள் என்பதை உலகிற்குக் காட்டுங்கள்; உண்மையான உங்களை மக்கள் பார்க்கட்டும்: உங்களது அழகிய உறுப்புகளையும் உருவத்தையும் எத்தனை முறை நிலைக்கண்ணாடியின் முன் நின்று உற்றுநோக்கி யிருக்கிறீர்கள். இப்போது உங்களுக்கோர் வாய்ப்பு. எங்கள் வண்ணப் படங்களுக்கு ''மாடல்''களைத் தேடி வருகிறோம். இந்தப் படங்கள் உலகப்புகழ் பெற்ற ஒளிப்படக் கலை நிபுணர்களால் பிடிக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட ''மாடல்'' களுக்கு நிறைந்த சன்மானம் உண்டு. எங்கள் மாடல்கள் பலரும் திரைப்படங்களிலும், விளம்பரங்களிலும் ஒளிவிடுகிறார்கள். நீங்கள் மட்டும் ஒளிவிடக் கூடாதா? உங்கள் நீச்சல் உடையில் உள்ள முழு உருவப் படமும் கிளோஸப் படமும் அனுப்புங்கள்.''

இந்த விளம்பரத்தை விடாமல் மாதாமாதம் ''டெபானீர்'' என்ற பிரபல ஆங்கில இதழ் வெளியிட்டு வருகிறது, பாமர பெண்களை சபலப்படுத்தி வலை விரிக்கும் தூண்டில் வார்த்தைகள் இவை.

பெண்களை ஆபாசமாக இழிவுப் படுத்துவதைதடைசெய்யும் 1986 ஆம்ஆண்டுசட்டத்தின் 4-ஆம் பிரிவு இருக்கிறது. இருந்து பயன் என்ன?

தொடரும் ''டெபானீர்'' விளம்பரம் ஏன் தடை செய்யப்பட வில்லை'' சட்டத்தின் எந்த இடுக்குகளில் ஒளிந்து கொண்டு இது வெளிவந்தாலும், பெண்மையை இவ்விளம்பரம் மலினப் படுத்துவது வெட்ட வெளிச்சம்தானே!

— வே. சிதம்பரம், இசு

FREE E - BOOKS , www.thamizham.net.,

# மரண பயம்

வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருந்தால் மரணமும் அர்த்தமுள்ளதாகவே இருக்கும். மரணத்தை விட அதி முக்கியமானது மரணத்தைப் பற்றிய நம் நேர்க்காகும்.

ஆம், மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளாகத்தான் நாம் இருக்கின்றோம். தனிச் சிறையில் மரணம் கோடிக்கால் பூதமாக நம்மை விழுங்க வருகிறது. அதன் சில கால்களை அவ்வப்போது உணர்கிறோம். இருந்தாலும் மரணத்தைப் பற்றிய நம் நோக்கைத் தேர்ந்தெடுப்பதில் நமக்கு சுயேச்சை யுண்டு.

மரணம் வாழ்வின் ஓர் அங்கம். (ஆன்மீக) வளர்ச்சியின் ஒரு கட்டம்; வளர்ச்சியின் ஓர் அனுபவம். சில காலங்களுக்கு முன் "செக்ஸ்" என்பதே ஒரு கெட்ட வார்த்தையாக இருந்தது. சிக்மெண்ட ஃப்ராய்ட் ஒரு மஞ்சள் பத்திரிகையாளராகவே சித்திரிக்கப் பட்டார்; ஆனால் காலம்மாறியது. அடிமனதில் மனக்குகைஓவியங்களை வெளியில் கொணர்ந்த ஃப்ராய்டிற்கு நன்றி; இப்போதோ 'மரணம்' அந்த இடத்தை பிடித்துக் கொண்டுள்ளது. மரணம் என்பதே ஒரு கெட்ட வார்த்தையாகவும், பயங்கரமான எதிரியாகவும் சித்தரிக்கப்படுகிறது.

அமெரிக்க மருத்துவப் பள்ளிகளில் மரணம் மருத்துவத்தின் தோல்வியாக, ஒரு மருத்துவரின் தனிப்பட்ட தோல்வியாகக் கருதப்படுகிறது. 1978-இல் நடத்தப்பட்ட ஒரு புள்ளி விவரப்படி 107 அமெரிக்க மருத்துவப் பள்ளிகளில் மட்டுமன்றி பள்ளிகளிலும், கல்லூரிகளிலும்கூட (Thanatology) பற்றிய முழு நேர பாடத்திட்டம் அமைத்துள்ளன. இறப்பியல் ஒரு புதிய மருத்துவத்துறை. மரணத் தருவாயில் இருக்கும் நோயாளிகளுக்கும், அவரது குடும்பத்திற்கும் மரணத்தை எவ்வாறு எதிர்கொள்வது என்பதைப் பற்றிய விஷயங்களைச் சொல்லித் தருவதற்கு இத்துறை பயிற்சி யளிக்கிறது. மரணத்தை மறுக்கும் சமுதாயத்தில் இது ஒரு நல்ல மாற்றமே.

—ரமேஷ்

FREE E - BOOKS , www.thamizham.net.,

## காணாமல் போகிறவர்கள்

சென்னைத் தொலைக் காட்சி நிலையத்தில் நாள் தப்பினாலும், காணாமல் போகிறவர்களைப்பற்றிய அறிவிப்புகள் புகைப் படங்கள் ஒளிபரப்பப்படுவது தப்புவதில்லை.

இப்படிக் காணாமல் போகிறவர்களில் பெரும்பாலோர் சிறுவர், சிறுமியராகவே உள்ளது. மனதைப் பிழிவதாக உள்ளது. ஓராண்டில் நூற்றுக்கணக்கான குழந்தைகள்—பள்ளிக்குச்சென்ற குழந்தைகள்—வீடு திரும்பாமலேயே காணாமல் போகிறார்கள்.

குழந்தைகளை முடமாக்கி, அவர்களை வைத்து 'பிச்சைபோடுங்கள் ஐயா! கண்ணில்லா கவோதி'' என்று சொல்ல வைத்து நம் மக்களிடமிருந்து இரக்கக் கண்ணீரை கறக்க வைத்து காசு சேர்க்கும் ஒரு சுயநல அரக்கக் கூட்டம் குழந்தைகளை வேட்டையாடித் திரிவதாகத் தெரிகிறது.

''இந்தவாரம் காணாமல் போன 15குழந்தைகளில் 10 குழந்தைகள் கிடைத்து விட்டார்கள். அவர்களைத் திருடிய கிராதகர்களை லாக் அப்பில் வைத்து விட்டோம்'' என்று ஒரு நாளும் வாரக் கடைசியில் சொன்னதில்லை. ஒரு முறை தொலைக்காட்சி எதிரொலி நிகழ்ச்சியில் ஒரு நேயர் ''காணாமல் போகிற சிறுவர் சிறுமியர் என்ன ஆகிறார்கள்? அவர்கள் கண்டு பிடிக்கப்படுகிறார்களா? போலீசார் என்ன செய்கிறார்கள்'' என்று கேட்ட கடிதத்திற்கு, பதிலளிப்பவர் ஏதும் கூறாமல், ''அடுத்த கடிதத்தைப் படியுங்கள்'' என்று பொறுப்பற்ற தனமாக நடந்து கொண்டார்.

தமிழக போலீஸ் மிகவும் திறமையானது என்பார்களே! 70 வயது கிழவியைக் கொன்று விட்டு, அவள் போட்டிருந்த 70 சவரன் நகையைத் திருடியவனை 7 நாட்களுக்குள் பிடித்துக் கூண்டில் ஏற்றி விடுகிறார்களே! இவ்வளவு அகடிதகடனா சாமர்த்தியம் உள்ளவர்கள் இந்தக் குரூரமான குழந்தை திருடுகிறவர்களிடம் தங்கள் கைவரிசையைக் காட்டுவதில் மட்டும் ஏன் மந்தமாக இருக்கிறார்கள்? — க. ராமன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சோலைக் குயில்கள்

## கவிதை

இன்று தினமலர் வாரமலர், தாய் போன்ற இதழ்களில் மட்டும்தான் கவிதை அல்லது கவிதை என்று சொல்லிக் கொள்கிற சில வெளி வருகின்றன. புதுக்கவிதை 80-களின் தொடக் கத்தில் மிக கவர்ச்சிகரமான அம்சமாக பத்தி ரிகைகளில் இருந்தது. சினிமாவில் பாத்திரங் கள் புதுக்கவிதை சொன்னார்கள். புதுக்கவிதை புத்தக விற்பனை சக்கை போடு போட்டது.

இப்போது பரபரப்பு ஓய்ந்தது. பத்திரிகை களில் புதுக்கவிதையை போட்டிகளில் மட்டுமே பயன்படுத்துகிறார்கள். புதுக் கவிஞன் வருகி றான் என்றால் பதிப்பக முதலாளி ஒளிந்து கொள்கிறார். கவியரங்கங்களிலும் புதுக்கவிதை சொன்னால் கைத்தட்டு கிடைப்பதில்லை 'சந்தக்கவிதை சீசன்' மீண்டும் ஆரம்பமாகிறது.

இந்த சமயத்தில்தான் சோலைக் குயில் களின் கவிதைத் தொகுதி வெளி வந்திருக்கிறது.

1981-ல் திருச்சி பழக்கடை பூங்காவில் சோலைக் குயில்கள் இயக்கம் உருவானதாம். இங்கு மாதந்தோறும் பாடப்படும் கவிதைகள் மாத இதழாக வெளியிடப்படுகின்றனவாம் 5 ஆண்டுகளில் 137 கவிஞர்களின் 621 கவிதை களை சோலைக் குயில்கள் வெளியிட்டுள்ளதாம் அதிலிருந்து எடுக்கப்பட்ட சில கவிதைகள் இப்போது புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளன.

'மாதந்தோறும் மக்கள் நடமாடும் ஒரு பூங்காவில் தொடர்ந்து கவியரங்கம் நடத்துவதும், ஆர்வமுள்ள யாரும் கலந்து கொண்டு கவிதை பாடலாம் என்று அறிவிப்பதும், அவ்விதம் பாடிய கவிதை களை விருப்பு வெறுப்பின்றி ஒருகுழு அமர்ந்து தேர்வு செய்து அச்சிட்டு வெளி யிடுவதும்........தமிழ் நாட்டின் முதல் இலக்கிய ஜனநாயக சம்பவம்' என்கிறார் கவிஞர் கந்தர்வன்.

—ஸ. ஜெ. சூர்யா

(வெளியீடு: சென்னை புக்ஸ், 6 தாயார் சாகிப் 2-வது தெரு, சென்னை 600002. விலை ரூ 11-00)

FREE E - BOOKS , www.thamizham.net.,



# பேசும் படம்

## விமர்சனம்

ஒலிப்பதிவு விஞ்ஞானம் வளராதபோது வந்த ஊமைப் படங்கள் வேறு. இப்போது வந்திருக்கிற வசனமற்ற இந்தப் படம் வேறு. மாபெரும் VISUAL MEDIA வாகிய திரைப்படத்திற்கு வசனம் தேவைதானா என்கிற வினா இப்படத்தின் மூலம் எழுப்பப்பட்டிருக்கிறது. வசனம், பாடல்களுக்காகவே ஓடிய படங்கள் உண்டு. எழுபதுகளில் இயக்குனர்கள் நிறைய வசனகுறைப்பு செய்தார்கள். முதன் முறையாக இன்று வசன நீக்கம் செய்து காட்டியிருக்கிறார் இயக்குனர் சிங்கீதம் சீனிவாச ராவ்.

தொழில் நுட்ப ரீதியில் இப்படம் வெற்றி பெற்றுபெற்று விட்டது. சிறப்பான ஒளிப்பதிவு, வசனமில்லை என்கிற குறையை மறையச் செய்கிற இசை. பாத்திரங்களின் அபிநய நடிப்பு, இதயம் நெருடும் காட்சி அமைப்பு— போன்றவை படத்தில் கூட்டல் புள்ளிகள்.

ஆனால் கதை? கட்டை விரலில் எழுதிவிடலாம். வேலையில்லா பட்டதாரி கமலஹாசன், போலி பணக்காரனாகி பணத்தின் மதிப்பின்மையை உணர்ந்து பழைய நிலைக்குத் திரும்புகிறான். ஆழமான கதையை வசனமில்லாது விவரிக்க முடியாது என்பதால் எடையில்லாத கதை எடுத்தாளப்பட்டிருக்கிறது. படத்தின் ஆரம்பத்தில் இருக்கும் அருவருப்பான விஷயங்களை, சாத்தியமற்ற சம்பவங்களை, வேண்டுமென்றே பிரிக்கப்பட்ட காதலை தவிர்த்திருக்கலாம்.


படத்தில் பிச்சைக்காரன் பாத்திரம் சிறப்பாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அவன் இறந்ததும் பிணத்தை தெருவில் எறிந்துவிட்டு பணத்தை பலரும் பொறுக்குகிற சம்பவம்......கவிதை!

வசனமில்லாத திரைப்படம் என்பது மிகப் புதுமைதான், பாராட்டுகள். மௌனத்தால் சில விஷயங்களைத்தான் புரியவைக்க முடியும். வார்த்தைகளின் அவசியத்தை இப்படத்தின் சில இடங்களில் உணரலாம்.

— நா. தென்னிலவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

## வாசகர் எதிரொலி



திருமயத்தில் எல்லா ரயில்களும் நிற்க ஏற்பாடு செய்தால், அதுவே தீரர் சத்திய மூர்த்திக்கு நினைவுச் சின்னமாக அமையும் எனத் தாங்கள் எழுதியது மிக நல்ல யோசனை, பாராட்டுக்குரியது. பலருக்குப் பயன் தரத்தக்கது.

—அழ. வள்ளியப்பா, சென்னை-40

---

இலங்கையை இந்தியாவுடன் இணைப்பதே ஈழப் பிரச்சனைக் காண தீர்வு எனும் கட்டுரை நடைமுறை சாத்தியமில்லாதது, இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைக்கு விரோதமானது, ஈழத்தமிழரின் தன்மானத்திற்கும் சிங்களவரின் கௌரவத்திற்கும் இழுக்கானது.

—பிருந்தாசாரதி, குடந்தை

---

ஒரு கோணத்தில் பார்த்தால் 'எழில்' கூறியிருக்கும் காரணங்கள் மிகச் சரியாகவே உள்ளன. இலங்கை இந்தியாவுடன் இணைவதில் தவறில்லை.

— எஸ். வி. ராஜசேகர், சென்னை-5

---

தமிழர்கள் மொழிப் பிரச்சனையால் இந்தியாவிலேயே 2-ம்தர குடிமக்களாக்கப்பட்டுவிட்ட பிறகு ஈழத்தமிழர்கள் இந்தியாவுடன் இணைந்து சகல உரிமையையும் பெற முடியுமா?

—தங்க. உமாசங்கர், 612001

---

திருமண வைபவங்களுக்கு
நாதஸ்வரம், மாப்பிள்ளை அழைப்புக்கு
"கார்" — தேவைக்கு அணுகவும்

**இல. பாலசுப்பிரமணியன்**

AP 638, 'H' பிளாக்
அண்ணா நகர், சென்னை-600 040.

---

FREE E - BOOKS , www.thamizham.net.,



# வேறு வகை சதி

கணவன் இறந்ததற்காக மனைவியும் தீயில் விழுந்து அழித்துக் கொள்ளும் 'சதி' என்கிற வழக்கத்தை இன்றும் சில பேர்கள் கடைப்பிடிப்பதைக் காண்கிறோம்.

இது சட்ட விரோதமானது என்று அரசு தடுக்கிறது. நாகரிக உலகத்தினர் தலைகுனியும் இந்த அவலத்தை ஒழிப்பது பற்றி இரண்டு கருத்து இருக்கக் கூடாது.

கணவன், மனைவியிடையேத நிலவும் அளவற்ற காதலால், கணவன் இறந்வுடன் மனைவி தன்னை அழித்துக் கொண்டாலும் அது சட்ட விரோதமே. பழந்தமிழகத்தில் நிலவியமூவகைக் கற்புள் முதல் வகை கணவன் இறந்த மறுகணம் உயிர் விடல், (சிலப்பதிகார பாண்டிமாதேவி) இரண்டாவது வகை கணவனுடன் சிதைமூட்டி உயிர் விடல், இவை இரண்டும் அன்று சிறந்த கற்பாகக் கருதப்பட்டாலும், (புறநானூறு-பெருங்கோப் பெண்டு) அவர்கள் புகழப்பட்டாலும், இன்று இதே மாதிரி யாராவது செய்தால் அது சட்ட விரோத நடவடிக்கையாகக் கருதப்படும்.

அன்புக் கணவனுக்காக, தன்னையே இழக்கும் நிலையே தவறு என்றிருக்கும்போது, கட்சித் தலைவனுக்காக தொண்டர்கள் தீக்குளித்து சாவதென்பது தவறிலும் தவறு; எந்த விதத்திலும் 'சதி' என்ற கொடிய பழக்கத்தை விட மோசமானது.

ராஜஸ்தானில் தன் கணவனுக்காகத் தன்னை தீமூட்டிக் கொண்ட பெண்ணுக்கு எந்தக் கோயிலும் கட்டக் கூடாது என்று அரசு எச்சரித்தும், கண்டித்தும், தடுத்தும் வருகிறது. கட்சி தொண்டன் தலைவனுக்காகவோ, அல்லது கட்சியின் கொள்கைக்காகவோ தீக்குளித்து மாண்டால்—நினைவுச் சின்னங்கள் எழுப்பப் படுகின்றன, அவரது குடும்பம் தலைவர்களால் கௌரவிக்கப் படுகின்றது; அவர் பெயர் நபர்களுக்கும், கட்டடத்துக்கும் வைக்கப்படுகிறது. அந்த நபர் தியாகியாகிறார்.

— எழில்

FREE E - BOOKS , www.thamizham.net.,



# 19ஆம் நூற்றாண்டு தமிழ் ஏடு

சென்ற நூற்றாண்டு தமிழ் பருவ இதழ்கள் எப்படி இருந்தன? மாதிரிக்கு 1841 ஜனவரி முதல் வியாழனன்று தோன்றிய **உதயதாரகை**யைப் பார்ப்போம்:

மாதத்தின் முதலாம், மூன்றாம் வியாழக் கிழமைகளில் வெளியான மாதமிருமுறை ஏடு இது, எட்டுப் பக்கங்களைத் தாங்கி இது தமிழிலும், ஆங்கிலத்திலும் கட்டுரைகளைக் கொண்டுள்ளது. அட்டைப் படம் என்று தனியாக இல்லை. முதற் பக்கம் முதலே செய்திகள் அச்சிடப்பட்டுள்ளன.

''இதன் விலை, பத்திரம் ஒன்றுக்கு, 2 பென்சு அல்லது 16 வெள்ளைச் சல்லி, அல்லது மூன்று மாதத்திற்கும் முன்றைக் கொடுத்திருந்தால் அப்பத்திரங்களின் விலை ஒரு சிலிங்கு'', என்று சந்தா விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதினச் சங்கதிகள் என்னும் தலைப்பில் நாட்டில் நடைபெற்ற செய்திகள் குறிப்புகளாக விளக்கப்பட்டுள்ளன,

இப்போதைய இதழ்களின் முக்கிய பங்கு வகிக்கும் ஜோதிடப் பகுதி, அன்று வெறுப்புக் குள்ளாக்கப்பட்டதைச் சில பகுதிகள் விளக்கு கின்றன.

இதழுக்கு வாசகர்கள் கடிதம் எழுதும் போது இப்படிப் பொதுப் பெயரிட்டு குறிப் பிடும் வழக்கைக் காண்கிறோம்:

''இப்படிக்கு, வயித்தியப் பிரியன் மேற் பிரியன்.''

''இப்படிக்கு, உதய தாரகையின் ஒருசொல் நிரைபனாள முனியபெருமாள்.''

''இப்படிக்கு, தாயுமானவர் பாடல் மேற் பிரியன்.''

படிப்போர்க்கு நல்ல கருத்துகளை நேரடி யாக வற்புறுத்தாமல், படிக்கும்போது நுட்பாக உணர்த்தும் வண்ணம் இந்த 146 ஆண்டுகட்கு முற்பட்ட இதழின் கட்டுரைகள் சிந்திக்க வைக்கின்றன.

**—சோர்விலான்**

FREE E - BOOKS , www.thamizham.net.,

## தனித்தமிழ் இயக்கம் தமிழில் மட்டுமா?

தனித்தமிழ் இயக்கம் போல் வேறு திராவிட மொழிகள் ஏதும் வடமொழி கலப்பை நீக்க முயன்று உள்ளனவா?

நம்மில் பலருக்கு வியப்பளிக்கும் வண்ணம் 12ஆம் நூற்றாண்டிலேயே, தெலுங்கு மொழியில் தனித்தெலுங்கு இயக்கம் தீவிர மக்கள் இலக்கியமாக எழுச்சிப் பெற்றிருக்கிறது.

சிவகவிகள், பொதுமக்களிடம் சைவத்தைப் பரப்ப எளிய மக்கள் மொழியே சிறந்தது என்ற கருத்துடன், 12,13 ஆம் நூற்றாண்டுகளில் எளிய தனித்தெலுங்கில் கவிதைகள் பாடினர் இவ்வியக்கம் ஒருகாலக் கட்டத்தில் தீவிரமடைந்தபோது, 'ஒரு வடமொழிச் சொல்லேனும் என் கவிதையில் காணப்பட்டால், தலையைத் துண்டித்துக் கொள்வேன்' என்று வீர சபதம் செய்த கவிஞர்கள் உண்டு. மறந்து போன, பழங்காலத்து தெலுங்குச் சொற்கள் அக்காலக்கட்டத்தில் புத்துயிர் பெற்றன. புதிய தெலுங்கு சொற்களையும் தனித் தெலுங்கில் படைத்தனர். இதுவரை சிவனை ருத்ரா என்று வழங்கி வந்ததை மாற்றி முக்கண்டி (முக் கண்ணன்) என்றும், சரஸ்வதியை சதுவுலம்மா என்றும் புதிய சொற்களில் அழைத்தனர்.

மீண்டும் 19-ஆம் நூற்றாண்டில், மிகுந்த வடமொழி சொற்கள் தெலுங்கில் மலிவதைத் தடுக்க ''அச்ச தெலுங்கு காவியா'' என்ற தனித் தெலுங்கு இலக்கியமுயற்சி தொடங்கப்பட்டது. கூச்சி மந்சி திம்மகவி என்ற கவிஞர் இம்முயற்சியில் முன் நின்றவர். தனிமொழி தீவிரமும், மக்களிடமிருந்து அந்நியப்படும் செயற்கை தன்மையும் தனிமொழி இயக்கங்களை வலுவிழக்கச் செய்தன. இதே கதி தனித் தெலுங்கு இயக்கத்திற்கும் நேர்ந்தது.

---

★ **சுட்டி வாசகர் இயக்க விண்ணப்பம் பெறாதவர்கள் எழுதுங்கள்.**

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ராஜேஷ்குமார்

*1968*-ல் எழுத ஆரம்பித்த ராஜேஷ்குமார் *100*க்கும் மேற்பட்ட நாவல்களை உற்பத்தி செய்துவிட்டார். சிறுகதைகளை எழுதிவந்த இவரிடம் மாலைமதிக்கு நாவல் கேட்டு தொடங்கி வைத்தவர் ரா. கி. ரங்கராஜன். பத்திரிகைகளை விற்பனையாளர்கள் 'ராஜேஷ் குமார் நாவல்களை போடுங்கள்' என்று வலியுறுத்துகிற அளவிற்கு இவரது வியாபாரம் கொடிகட்டிப் பறக்கிறது.

முதல்வரிடம் கோப்பில் கையெழுத்துக் கூட வாங்கி விடலாம். இவரிடம் நாவல் வாங்குவது சிரமமாயிருக்கிறது என்று பத்திரிகைக்காரர்கள் சலித்துக் கொள்கிறார்கள்.

வாசகனை அடிக்கொருதரம் திடுக்கிட செய்வது. பத்து பக்கங்களுக்கு ஒரு கொலை. விறுவிறுப்பான நடை. வார்த்தைகளில் 50% தமிழ். 50% பிறமொழிச் சொற்கள், கதைகேட்கும் கும்பலை சுவாரஸ்யப் படுத்தும் டெக்னிக்குகள்.... இவை இவரது வெற்றிக்கான அடிப்படை.

''க்ரைம் சப்ஜெக்டைவெச்சு நாவல் எழுதி எழுதி எம் பேனாவுக்கு அலுத்துப்போச்சு சார்'' என்றுபெருமையாகக் கூறிக்கொள்ளும், (மின்மினி வார இதழ் 18-04-87) இவர் செக்ஸையே எழுதுவதில்லையாம்.... 'இன்னும் கொஞ்சம் கீழே போனால் ஜெயராஜுக்குப் பிடித்த பிரதான அம்சங்கள்' (ஒரு கப் ரத்தம் க்ரைம் நாவல் ஜூலை' 86)

வானம் தொட்டுவிடும் தூரம்தான் என்கிற வைரமுத்துவின் தலைப்பைக் கொஞ்சம் மாற்றி எவரெஸ்ட் தொட்டுவிடும் உயரம் தான் என்ற தலைப்பில் சுயசரிதம் எழுதினார். சரிதம் ஃப்ரெட்ரிக் நீட்சேவின் மோசமான மேற்கோளோடு தொடங்குகிறது. ராஜேஷ்குமாரை புரிந்து கொள்ள இது உதவும். 'உண்மை மிகவும் பயங்கரமானது! யாருக்கு வேண்டும் இந்த உண்மை? நமக்கு வேண்டியதெல்லாம் அழகான பொய்களும் மாயைகளும் அழகான கனவுகளும் தான்.'

— பார்வையாளன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# லஞ்சம் வாங்குவதில் நேர்மை



வரலாறு காணாத அளவுக்கு லஞ்சம் இங்கே புகுந்து விட்டது மட்டுமில்லை, லஞ்சம் வாங்குவது ஒரு வாழ்க்கை முறையாகவும் நாறி வருகிறது.

லஞ்சம் வாங்காமல் ஒருவன் இருக்க முடியுமே தவிர, லஞ்சம் கொடுக்காமல் இருக்க முடியவில்லை. இப்போது இந்த லஞ்சம் பெறல் என்பது அதிகாரத்தில் உள்ளோரின் அடிப்படை உரிமையாக நினைக்கப்படுகிறது. லஞ்சம் கொடுத்து வேலையைப் பெற்றவர்கள் லஞ்சம் பெற்று அப்பெருந் தொகையைச் சரிக்கட்டும் உரிமை பெற்றவர்கள் என நினைக்கிறார்கள்.

லஞ்சம் வாங்குவோரிலும் இரு வகை: பணம் வாங்கிக் கொண்டு எதுவும் செய்யாமல் மோசடி செய்பவர்கள்; பணம் பெற்று அதற்கான வேலை செய்பவர்கள். இதிலே பணம் பெற்றுக் கொண்டு சரியாக வேலை செய்பவன், பெற்றது லஞ்சமாக இருந்தும் கூட — மரியாதைக்குரியவனாக்கப்படுகிறான். தன்னை கௌரவமாக வெளிப்படுத்திக் கொள்கிறான். சான்று வேண்டுமா? ஹரியானா முந்தைய முதல்வர் பஜன்லால் கூறுவதைக் கேளுங்கள் :

''நான் ஹரியானாவில் முதல் மந்திரியாக இருந்த பொழுது லஞ்சம் வாங்கினேன் என்பது உண்மைதான். ஆனாலும் நான் உங்களுக்குக் காரியங்களை நிறைவேற்றிக் கொடுத்தேன். ஆனால் இன்று லஞ்சம் ஒழிந்து விட்டதா? இல்லை, இப்போது நீங்கள் உங்களுக்கு தேவையானவற்றை அடைய முடிகிறதா? இல்லை. நான் லஞ்சம் வாங்குவதில் நேர்மையானவன். ஆனால் இப்போது ஆட்சியிலிருப்பவர்கள் லஞ்சம் வாங்குவதில் நேர்மையற்றவர்கள்.''
(தி. வீக் 29-11-87)

தமிழ் நாட்டிலும் இப்படிப் பேசுவோர் குரல் கேட்கிறது. லஞ்சம் ஒரு சமூக அந்தஸ்தைப் பெற நாம் அனுமதிக்கத் தொடங்கி விட்டோமா?

— ஸ்டெனிஸ்லாஸ்

FREE E - BOOKS , www.thamizham.net.,



# கொரில்லா போர் என்றால் என்ன?

ஒழுங்கான, பலமான ராணுவத்தை எதிர்த்து, வழக்கத்துக்கு மாறான ஆயுதங்களையும், முறைகளையும், பயன்படுத்தி செய்யப்படும் ஒழுங்கற்ற போர்முறைதான் கொரில்லா போர். ஸ்பானிய மொழியில் இச்சொல்லுக்குச் சிறிய அளவிலான போர் என்று பொருள்.

வரலாறு முழுவதும் இத்தகைய போர் முறை காணப்பட்டாலும் நெப்போலியன் தலைமையிலான பிரஞ்சுப் படைகளை விரட்ட ஸ்பானிய, போர்த்துகீசிய ஒழுங்கற்ற படையைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட தீபகற்பப் போரில்தான் இச்சொல் டியூக் ஆப் வெலிங்டனால் வழக்கிற்கு வந்தது. நெப்போலியன் மாஸ்கோவிலிருந்து திரும்புகையில் இதே கொரில்லா போர் முறையை எதிர்கொள்ள முடியாது கலங்கிப் போனான்.

அமெரிக்க விடுதலைப் போராட்டத்திலும், இந்திய ஆப்பிரிக்க விடுதலைப் போராட்டங்களிலும் கூட சிலகட்டங்களில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக கொரில்லா போர் நடத்தப்பட்டிருக்கிறது.

மஞ்சு அரச பரம்பரைக்கு எதிராக சீனாவில் நடத்தப்பட் தாய்பிங் (1850-64)யில் கொரில்லா போர் முறை கையாளப்பட்டதும், அதில் 2 கோடி பேர் உயிரிழந்ததும் சமூக எழுச்சியில் மைல் கல்லாகக் கணிக்கப்படுகிறன.

இந் நூற்றாண்டில் பல மக்கள் போராட்டங்கள் சர்வாதிகாரத்திற்கு எதிராகவும், அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகவும் கொரில்லா போர் முறையில் தான் நடத்தப்பட்டுள்ளன.

இராணுவத் தாக்குதலை விட கொரில்லா தாக்குதலுக்குப் புத்தி கூர்மை தேவை. கொரில்லா அணித் தலைவருக்கு மிகச் சிறந்த அறிவாற்றலும், துணிச்சலும் தன்னம்பிக்கையும் தேவை. எல்லாவற்றிற்கும் மேலாக இதற்கு ஆதரவாக பெரும் மக்கள் கூட்டமும், அர்ப்பணிப்புக்குத் தயாரான வீரர்களும் தேவை.

— ஸ்டெனிஸ்லாஸ்

FREE E - BOOKS , www.thamizham.net.,

## ஜெயவர்த்தனேயிடம் சில கேள்விகள்

கே: தேர்தலுக்கு முன்பே விடுதலைப் புலிகள் ஒழிக்கப்படுவார்கள் என நம்புகிறீர்களா?

ப: ஆம். பயங்கர வாதசக்தியாக அவர்கள் இயங்காமல் ஒடுக்கப்படுவார்கள். அவர்கள் ஏற்ககனவே உதிர்ந்து வருகிறார்கள்.

கே: ராஜீவ் காந்தியும், அமைதிப்படையும் ஒப்பந்தத்தை அமுல் படுத்த நிறைய சிரமப் பட்டிருக்கிறார்கள், இதற்கு பிரதி உபகாரம் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

ப: ஒப்பந்தத்தில் எங்கள் பங்கை நாங்கள் ஆற்றுவோம். அதுவே ஒரே வழி.

கே: இந்தச் செயல்பாட்டில் ராஜீவ் காந்தி நிறைய சிரமப் பட்டிருக்கிறார் என்று நினைக்கிறீர்களா?

ப: எங்கள் மக்களும்தான் சிரமப்பட்டிருக்கிறார்கள். திரிகோணமலையில் உள்ள அகதிகளேப் பாருங்கள். இதற்கு முன் யாருமில்லே; இப்போது ஆயிரக் கணக்கில் இருக்கிருர்கள்.

கே: அமைதிப்படையினர் வரவினால்தான் இவர்கள் அகதியானார்களா?

ப: ஆம். எங்களை அச்சுருத்துபவர்கள் அமைதிப் படையினரே என்று அவர்கள் கூறுகிறார்கள்.

கே: நீங்கள் இதை நம்புகிறீர்களா?

ப: அது வேறு விஷயம். ஆனால் நாங்கள் எங்கள் வீடுகளை இழந்து வந்தது இந்தியப் படையால் என்று அவர்கள் கூறுகிறார்கள்

கே அமைதிப் படை உங்கள் வழிநடத்தல் படி இயங்குகிறது?

ப: ஆம்! என்னுடைய மேற்பார்வையில் தான் அவர்கள் இயங்க வேண்டும். தினசரி செயல்பாடுகளை யெல்லாம் நான் கவனித்துக் கொள்வதற்கில்லை.

நன்றி : இந்தியா டுடே

FREE E - BOOKS , www.thamizham.net.,

சுட்டி பதிவு எண் : TN/MS/(N) 317

# குடும்பக் கட்டுப்பாடும் சாதியும்

1981 - இல் எடுத்த கணக்கெடுப்பின் படி தமிழ் நாட்டு மக்கட் தொகை 4.84 கோடி இப்போது அது 12 கோடி! இது உண்மையில் தமிழ்நாடு அரசின் தீவிர குடும்பக்கட்டுப் பாட்டுப் பிரச்சாரம் படுதோல்வி யடைந்து விட்டதாகக் கொள்ள வேண்டுமே. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் 7 கோடி பேர்கள் 6ஆண்டுகளில் இனப்பெருக்கமாகியிருக்க மாட்டார்கள்.

முதலமைச்சர் எம். ஜி. ஆரிடம் ஒவ்வொரு சாதிப் பிரதிநிதிகளும் கொடுத்த தங்களவர்களின் புள்ளி விவரத்தை அப்படியே கூட்டினால் 12 கோடி வருகிறது. வன்னியர்கள் தாங்கள் 2 கோடி பேர்கள் என்கின்றனர். முக்குலத்தோரும், நாடாரும் தாங்களும் இதே அளவு எண்ணிக்கையுள்ளோம் என்க்குறிப்பிட்டுள்ளனர். அரிசனமக்களும் 2 கோடி பேர்களாம். கிறிஸ்துவர்களும், இசுலாமியர்களும் தலா ஒரு கோடியாம். முதலியார்கள் 50 லட்சமாம். விஸ்வகர்மா இனத்தவர் 35 லட்சம் இருக்கின்றனராம். விடப்பட்ட பிராமணர் முதலிய சாதியினரையும் கூட்டிப் பார்த்தால் மொத்தத் தொகை 12 கோடியாகிறது. ஒவ்வொரு சாதிக்காரர்களும் தங்கள் சாதியினரின் எண்ணிக்கையை இப்படி வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தால் தமிழ் நாட்டில் நெரிசல் தாங்க முடியாதே! குடும்பக்கட்டுப்பாட்டுப் பிரச்சாரம் செய்வதற்கு முன்னால் அரசு சாதியொழிப்புப் பிரச்சாரம் செய்தாக வேண்டும்.

ஆசிரியர் :கு. நாராயண பாரதி,
வெளியிடுபவர் : கி. இராமச்சந்திரன்,
அச்சிடுபவர்: எம். எஸ். ரவீந்திரன்,
ரவீந்திரன் பிரஸ், 137 டாக்டர் நடேசன் ரோடு
சென்னை-600005.
முகவரி : 1494, அண்ணா நகர்,
சென்னை-600040

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
FREE E - BOOKS , www.thamizham.net.,